# பல்கலைக்கழக புலமைப்பரிசில் தெரிவுக்கு
# 24 மாவட்டங்களில் 6 பேர் மட்டுமே தமிழர்

கல்வித்திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவுக் கடன் வழங்கும் சபை (வரையறுக்கப்பட்ட) சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் 60 பேருக்குப் பல்கலைக்கழக புலமைப்பரிசில்களை (1989-90 கல்வியாண்டு அனுமதி) வழங்கவுள்ளது. சபை ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டே இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. 24 கல்வி மாவட்டங்களில் இருந்தும் 14 பாட நெறிகளில் இப்புலமைப் பரிசில்களைப் பெற 147 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இவர்களில் புலமைப் பரிசில்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களில் 6 பேர் மட்டுமே தமிழர்கள். எம். ஏ எம் ரமேஷ் - கல்முனை (கலைப்பிரிவு-250 புள்ளிகள), எஸ். சுப்பிரமணியம் - யாழ்ப்பாணம் (பொறியியல்-302 புள்ளிகள்), அழகரெத்தினம் மோகன் -திருமலை (பொறியியல் - 267 புள்ளிகள்), கே தர்மரெட்னம் - மட்டக்களப்பு (பொறியியல் - 247 —4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 04 ஒலி 287 செவ்வாய் 27-11-1990 (கார்த்திகை 11) ஜ அவ்வல் 09

யாழ் ஆஸ்பத்திரி தரிப்பில்

## 7 நாட்களில் 7 சைக்கிள்கள் திருடர்களால் திருட்டு

யாழ் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக நிறுத்தப்படும் சைக்கிள்கள் அண்மைக் காலமாக அடிக்கடிகளவு போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

கடந்த வாரம் மட்டும் இங்கு நிறுத்தப்பட்ட சுமார் ஐந்து சைக்கிள்கள் களவு போயுள்ளன. நேற்று மட்டும் இரண்டு சைக்கிள்கள் காணாமல் போயுள்ளன.

யாழ் போதனா வைத்திய சாலையில் சைக்கிள்களை நிறுத்துவதற்கேற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாமையினாலேயே இவ் —4 ஆம் பக்கம் பார்க்க

பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டும்

## மக்கள் வங்கிக்கு பணம் அனுப்ப தலைமை அலுவலகம் மறுக்கிறதாம்!

யாழ் மாவட்டத்திலுள்ள மக்கள வங்கிகளுக்கு பணம் வழங்க கொழும்பிலுள்ள மக்கள் வங்கித் தலைமை அலுவலகம் மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகமும், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் அலுவலகமும் யாழ் மாவட்ட மக்கள் வங்கிகளுக்கு பணம் அனுப்ப அனுமதியளித்த பொழுதும், மக்கள் வங்கியின் தலைமைச் செயலகம் பணம் தேவையில்லை எனக் கூறுகிறதாம்.

சென்ற தடவை இலங்கை —4 ஆம் பக்கம் பார்க்க

## நடக்காத பரீட்சைக்கு பெறுபேறு இங்கு வந்தது

நடக்காத பரீட்சை ஒன்றுக்கு பரீட்சைத் திணைக்களம் பெறுபேற்றை அனுப்பி வைத்துள்ளது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரே இந்த அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த ஜூலைமாதம் நடைபெற்ற ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்ற இந்த மாணவி விண்ணப்பித்திருந்தார்.

இவரது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட பரீட்சைத் திணைக்களம் ஜூலை மாதம் 21-ம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் பரீட்சை நடை —4 ஆம் பக்கம் பார்க்க

முஸ்லிம் மகாநாட்டில் நேற்றுத் தீர்மானம்

## வட-கிழக்கு தற்காலிக இணைப்பை உடன் நீக்க வேண்டுமாம்

வடக்கு, கிழக்கு தற்காலிக இணைப்பை உடன் நீக்க வேண்டுமென நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற முஸ்லிம் மகாநாட்டில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த வடக்குகிழக்கு இணைப்பை நீக்கிவிட்டு கிழக்கு மாகாணத்திற்கென தனி மாகாண சபை அமைக்கப்படல் வேண்டுமெனவும் இந்தமகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

'இனப்பிரச்சினைகளில் முஸ்லிம்களின் செயற்பாடு' —4 ஆம் பக்கம் பார்க்க

இது அவர்கள் வேலையல்லவாம்!

# மாங்குளம் தாக்குதல்
# 250 படையினர் பலி!

## அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன நேற்றுக் கொழும்பில் தகவல்

மாங்குளம் இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய மிகப்பெரும் தாக்குதலில் 250க்கும் கூடுதலான படைவீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாக கொழும்பில் நேற்று இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன. இதைப் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவும் ஊர்ஜிதப்படுத்தினார்.

கடந்த வியாழக்கிழமை இரவு மாங்குளம் முகாமைத் தாக்கிய விடுதலைப் புலிகள் அம்முகாமை 36 மணித்தியாலங்களாக முற்றுகையிட்டிருந்ததாகவும், றொக்கெட் வீச்சு எறிகுண்டுகளையும், தரம்கூடிய பீரங்கிகளையும் புலிகள்பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1976-ம் அண்டுக்குப்பின் அரசபடை வீரர்கள் இவ்வளவு பெருந்தொகையாக இறந்திருப்பது இதுவே முதற்தடவை என்று இவை சுட்டிக் காட்டின.

இதேவேளை மாங்குளம் பகுதியில் காலநிலை சீரற்றிருப்பதால் தப்பியோடிய சிப்பாய்களைக்கூட காட்டில் இருந்து ஹெலிகள் மீட்க முடியாது உள்ளதாக இராணுவம் தெரிவித்தது.

## அதிகாலை யாழ் கோட்டையில் 2500 தீபங்கள் ஏற்றப்பட்டன

மாவீரர் தினம் ஆறாவது நாளான நேற்று எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது கொட்டும் மழையையும்பொருட்படுத்தாது மக்கள் நிகழ்ச்சிகளில் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்

இதுவரை மரணித்த 2500 போராளிகளின் நினைவாக யாழ் கோட்டையில் இன்று அதிகாலை 12.03 க்கு 2500 தீபங்கள் ஏற்றிவைக்கப்பட்டன.

இன்று அதிகாலை 12.01 க்கு சகல ஆலயங்களிலும் ஒலித்த மணியோசையை அடுத்து இரு நிமிடங்கள் மக்களின் மௌன அஞ்சலி இடம் பெற்றது. கூட்டுறவுச் சங்கங்கள் அரச திணைக்களங்கள் உட்பட சகல இடங்களிலும் சுடர் விளக்குகள் ஏற் —4 ஆம் பக்கப பர்க்க

## மினி பஸ்கள் இன்று இலவச சேவை

மாவீரர் வாரத்தையொட்டி இறுதி நாளான இன்று இலவச மினிபஸ் சேவை இடம்பெறும் என மினிபஸ் சங்கம் அறிவித்துள்ளது. (74)

## கொமரன்கடுவ தாக்குதல் ஆயுதங்களும் மீட்பு

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சின்னமதவாச்சிக்கும், கொமரன்கடுவைக்கும் இடையே இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கித் தாக்குதல் நடாத்தியதில் 9 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். 5 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

—4 ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர்களின் பெற்றோர்கள் கைதடியில் கௌரவிக்கப்பட்டனர்

கைதடியில் மாவீரர் நாளை முன்னிட்டு நேற்றைய தினம் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி, நுணாவில் சந்தி, கைதடி - நுணாவில், கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளிலும் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு தீபம் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. இப்பகுதி வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன (71)

## அவசர நோயாளியை ஏற்ற அரச அம்புலன்ஸ் மறுப்பு

வெறுமனே வந்த அம்புலன்ஸ் அவசர நோயாளரை ஏற்ற மறுத்த சம்பவம் மானிப்பாயில் நிகழ்ந்துள்ளது.

இது பற்றி தெரியவந்துள்ளதாவது; நேற்று முன் தினம் மானிப்பாய் வைத்திய சாலை முன்பாகச் சென்று கொண்டிருந்த அம்புலன்ஸ் ஒன்றை மறித்து, அவசர நோயாளர் இருவரை யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல உதவக் கோரியபோது இது எங்கள் வேலை அல்ல என்றுகூறி சாரதி தொடர்ந்து செலுத்திச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெறுமனே சென்ற அந்த அம்புலன்ஸ், யாழ் போதனா வைத்திய சாலைக்குச்சொந்தமானதாகும்.

ஊரடங்குவேளையில் வேறு எந்த வாகனமும் உதவ முடியாத நிலையில் குறிப்பிட்ட அம்புலன்ஸ் சாரதி இவ்வாறு நடந்து கொண்டது குறித்துக் —4 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி, வலி வடக்கில் கூட்டுறவாளர் சைக்கிள் பவனி

வடமராட்சி கோட்ட கூட்டுறவாளர்களால் தேசிய கொடியுடன் கூடிய சைக்கிள் பவனி வடமராட்சிப் பகுதியின் முக்கிய இடங்கள் ஊடாக நடைபெற்று நெல்லியடியுடன் முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்து நெல்லியடி மத்திய மகா வித் —4 ஆம் பக்கம் பார்க்க

புதிய ஒய்வூதியத் திட்ட எதிரொலி;

# யாழ் - கிளி. வைத்தியசாலைகள் பலவும் ஸ்தம்பிக்கலாம்!

புதிய ஒய்வூதியத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பெரும்பாலான பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகள் (ஆர். எம். ஓ.) ஒய்வு பெற உத்தேசித்துள்ளதானது யாழ், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான அரசினர் கிராமிய வைத்தியசாலைகளும், மற்றும் அரசினர் மத்திய மருந்தகங்களும் செயலிழக்கும் ஆபத்தினை உண்டாக்கலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றி வரும் பெரும்பாலான பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பதவியிலிருந்து ஒய்வுபெறுவதற்கான விண்ணப்பங்களை யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள அரசினர் மத்திய மருந்துச் சாலைகளில் பொறுப்பதிகாரிகளாகப் பதவி வகித்துவரும் வைத்திய அதிகாரிகளும் இவர்களில் அடங்குவர்.

எதிர்காலத்தில் தமக்கு வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வரலாம் என்று கருதியே பெரும்பாலான பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் இந்த ஒய்வூதியத் திட்ட சுற்றறிக்கையைப் பயன்படுத்திப் பதவியிலிருந்து ஒய்வுபெற விரும்புவதாகவும் கருதப்படுகிறது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியில் கலந்துகொண்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. (50)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

(உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, யாழ்ப்பாணம்)

பாதுகாப்பற்ற, நெருக்கடியான காலகட்டத்தில் தன் துன்பம் பாராது, யாழ் மாவட்ட மக்கள் உணவுத் தேவைகட்கு, உணவுப் பொருட்ளை தருவித்து, பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கட்கூடாக விநியோகஞ் செய்வதற்கு அரும்பணியாற்றிய அமரர் நடேசபிள்ளையின் இழப்பு இன்று ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து, அஞ்சலி செலுத்துவதோடு அவரது குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர், இயக்குநர்சபை, பணியாளர்கள்.
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ. சங்கம்.

11144



## சிறு விளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும், பாஸ்போட், அடையாள அட்டை புகைப்படங்கள் பிடிக்கவும் கறுப்பு வெள்ளைப் படங்களை 12''X10'' அளவிற்கு பெரிதாக்கவும் நாடவேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல. 351, கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்) நல்லூர். 11113


ஈராக் அரசு கட்டளை

## விவசாயிகளும் ஆயுத படையில் சேர வேண்டும்

விவசாயிகளை ஆயுதப் படையில் சேருமாறு ஈராக் அறைகூவல் விடுத்துள்ளது.

அடுத்த மாதம் பதினைந்தாம் திகதிக்குப்பின் ஒரு வார காலத்துக்குள் படையில் விவசாயிகள் சேர வேண்டுமென்ற அரசின் கட்டளையை ஈராக்கிய செய்தி ஏடுகள் வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில் ஈராக்கியர் எவரும் உணவு மற்றும் மருந்துத் தட்டுப்பாடுகள் காரணமாக இறக்க நேரிட்டால் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் துருக்கிக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக ஈராக் அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட்டில் குவைத்தைப் பிடித்ததிலிருந்து ஈராக் மீது ஐ.நா. பொருளாதாரத் தடைகளை விதித்தது.

மாவீரர் வாரம்: போர்க்கால சிந்தனை - 7

## சாவும் விரும்பத்தக்கதே!

''தளபதியின் கண்மல்கச் சாவரின்;அச்சா
விழைவதுவே வேங்கைக்கு மேல்''

— போர்க்குறள்

''இப்போராளியைப் போரில் இழந்துவிட்டோமே'' என்ற தாங்கொணாத் துயரத்தினால் தலைமை தாங்கி நடாத்தும் வீரத்தளபதியின் கண்களில் இருந்து கண்ணீர் மல்குவாரேயானால் அச்சாவை அவ்வணிப் போராளி விரும்பி ஏற்றுக் கொள்வான்.

மண்மீட்புப் போரிலே - உயிர் துறந்த ஒவ்வொரு போராளியின் இழப்பின் போதும், ''உடன் பிறப்போடு தோள்வலி'' போயிற்றே என்று கண்கலங்கி, அவர்களுடைய பூத உடலுக்கு வீர அஞ்சலி செலுத்தி, சோக இசை மீட்டி, மரண ஊர்வலங்கள் நடாத்தி, நடுகற்களில் அவர்களுடைய புகழைப் பொறித்து, விழாவெடுத்துப் பெருமை சேர்க்கும் தளபதியின் சான்றாண்மையும், வினைத் தூய்மையும் போற்றுதற்குரியனவாகும்.

''புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து''

— திருக்குறள்

தம்மை உருவாக்கி, நெறிப்படுத்தி, வளர்த்தெடுத்த தலைவனின் கண்களிலிருந்து நீர் பெருகுமாறு ஒருவீரன் சாகப் பெறின், அத்தகைய சாக்காடு கெஞ்சியேனும் கொள்ளத்தகும் என்பது திருக்குறட் கருத்து.

— முருகனடியான்


யாழ் மாவட்டக் கூட்டுறவாளர்

நடாத்தும்

தமிழீழ மாவீரர் நாள்

## சிறப்புச் செய்தி

தன்னம்பிக்கையும், தளராத செல்வழியும் கொண்ட ஒரு தலைவனின் கீழ், இலட்சியப் பற்றும், இனத்தின் மீது கொண்ட பற்றும் உந்தித் தள்ள களமாடி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வேங்கைகளை நினைவு கொள்ளும் இம்மாவீரர் நாளிலே மாவீரர்களின் கனவை நனவாக்குவோம் என்ற உறுதிமொழியுடன் தீயினில் எரியாத தீபங்களை கூட்டுறவாளர்கள் நினைவு கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட கூட்டுறவாளர்கள்.

11145

முரசொலி

எமது சிந்தனை

1990-11.27 செவ்வாய்

''கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—என்றும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர்அவ் வீரர்—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக்
காப்பர்''

— பாரதி

# மாவீரர்கள்

**யார்** இந்த மாவீரர்கள்?

தம் மண்ணை - மக்களை நேசித்தவர்கள.

சொந்த நலனையும் சுகங்களையும் துச்சமெனத் தள்ளி, தமிழினத்தின் விடிவுக்காக விடுதலை வேள்வியில் ஆகுதியாய்ப் போனவர்கள்.

தாம் சந்தித்த புறக்கணிப்பை - அவமதிப்பை - இகழ்ச்சியை அடுத்த தலைமுறை சந்திக்கக்கூடாது என்ற தொலை நோக்குடன் சிந்தித்தவர்கள்; செயற்பட்டவர்கள்.

பசியும் அலைச்சலும், கண்ணீரும் செந்நீரும் தம்மை எதிர்கொண்ட போதும் கொள்கைப் பிடிப்போடு குறிக்கோளை நோக்கி நடைபோட்டவர்கள்.

எதிரி தன் முழுப்பலத்தையும் பிரயோகிக்கக் கண்டும் - சாவு நிச்சயம் என்பது தெளிவாகத் தெரிந்த போதும் - ஓரடி கூட, பின்வைக்க மறுத்தவர்கள்.

மெய்சிலிர்க்க வைக்கும் வீரத்தோடு - தியாக உணர்வோடு - மரணத்தைத் தழுவிக் கொண்டவர்கள்.

ஆதலால் இவர்கள் நினைவு கூர மட்டுமல்ல, வணங்கவும் தக்கவர்கள் - இன்று மட்டுமல்ல, என்றும், என்றென்றும்!

எமது நாளைய பொழுது நல்ல பொழுதாக விடிய வேண்டும் என்பதற்காக, தமது இன்றைய பொழுதைத் தியாகம் செய்ய முன்வந்த மாவீரர்களை உதயத்திலும் அஸ்தமனத்திலும் இதயத்தில் இருத்தி நன்றியோடு நினைவு கூருவோமாக!

எம்மைப்போல் அவர்கள் மூப்புக்கும் தளர்ச்சிக்கும், நோய்க்கும், பிணிக்கும், ஆளாக மாட்டார்கள். அவர்களைத் தீ தீண்டாது; நீர் நனைக்காது; காற்று உலர்த்தாது!

இத்துணைச் சிறு தொகையினரான மாவீரருக்கு இத்துணைப் பெருந்தொகையினரான தமிழ்மக்கள் கடன்பட்ட அளவுக்கு வரலாற்றில் யாரும் யாருக்கும் கடன்பட்டதில்லை!

மாவீரர்களை நினைவுகூரப்படும் இவ்வேளையில் அவர்களுடைய பெற்றோர்கள் தமிழினத்தின் விடிவுக்காகச் செய்துள்ள மகத்தான தியாகமும் நன்றியோடு நினைவு கூரத்தக்கது.

'தம் பொருள் என்ப தம்மக்கள்' ''மக்களின் ஒண்மைவாய்ச் சான்ற பொருளில்லை ''.

தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கனவுகளை தமிழினத்தின் கனவுக்குள் கரைத்து விட்டுத் தவமிருக்கிறார்கள் இந்தப் பெற்றோர்கள்.

விழுதுகளாகத் தம்மைத் தாங்குவார்கள் என நம்பிய மக்களை தமிழினத்தைத் தாங்க அனுப்பியவாகள் இவர்கள். இவர்களை ஆதரிப்பது தமிழர் கடமை.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் அறுபது மாவீரர்களுடைய பெற்றோரை அழைத்துக் கௌரவித்திருக்கிறது. இது போற்றுதற்குரிய சிறந்த முன்மாதிரியாகும்.

---

இன்று மாவீரர் நாள். தமிழீழம் எங்கணும் மக்கள் மாவீரரை நன்றியோடு நினைவுகூரும்நாள். மண்ணை-மக்களை - நேசித்த இத் தியாகிகளின் நினைவாக, நற்பணிகள் பல தொடங்கப் பெற்றுள்ளன. எங்கும் புத்துணர்ச்சி பொங்குகிறது.

இந்நன்னாளில், முரசொலி, இந்த மாவீரர் பக்கத்தைக் காணிக்கையாகப் படைக்கிறது.

— ஆசிரியர்

# 'மாவீரன் போலத் திகழடா'!

வீரன் வீழ்ந்த நிலமிது — புலி
வீரன் வீழ்ந்த நிலமிது!

ஈழம் காக்க முந்திய — தமிழ்
வேழம் வீழ்ந்த நிலமிது
நாளும் இதனைப் பாடுவோம் — நம்
நெஞ்சில் வைத்துப் போற்றுவோம்!

வீரன் வீழ்ந்த நிலமிது — புலி
வீரன் வீழ்ந்த நிலமிது!

எங்கள் குருதி மண்ணிலே — பெரு
வங்கக் கடல் போல் ஓடினும்
தங்கநாடு காத்திடும் — எம்
தாகம் வற்றிப் போகுமோ?

வீரன் வீழ்ந்த நிலமிது — புலி
வீரன் வீழ்ந்த நிலமிது!

கொள்கை ஒன்றே உயிரடா — தமிழ்...
உள்ளம் வளர்க்கும் பயிரடா!
வெள்ளம் என்னத் திரளடா — மா
வீரன் போலத் திகழடா!

வீரன் வீழ்ந்த நிலமிது — புலி
வீரன் வீழ்ந்த நிலமிது!

— மு. வே. யோ. வாஞ்சிநாதன்

---

''இம்மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்ட வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்துக்காக, கௌரவத்துக்காக, பாதுகாப்புக்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த மகத்தான தியாகிகள்.''

— தலைவர் வே. பிரபாகரன்

---

## மாவீரனே!

மாவீரனே!
உன் முகவரியும் தெரியாது!
முக அழகும் தெரியாது!
ஆனாலும் எனக்குள் ஒரு
துலக்கம்!
உன் கல்லறைக்கருகில்
நான் வந்தபோது
என் உணர்வுகள்
கிளர்ந்து எழுந்தன

மாவீரனே!
உன் கல்லறையில்
மண்டியிட்டு
அஞ்சலி செய்கிறேன்!
என் மனவறையில்
உன் உறுதி
உட்புகுகிறது!

- சு. ஸ்ரீகுமரன்

## அபய கரங்கள்

இந்த மண்ணின்
அடிமை விலங்கை
உடைத்தெறியக்
கிளம்பிய கரங்கள்
வாழ்வளிக்கும்
அபய கரங்கள்

விடுதலை வேள்வியில்
குருதி சொரிந்து
மடிந்த பல உயிர்கள்
மண்ணில் மணங் கமழும்
சந்தன மரங்கள்

- கிளாலியூர் கிங்ஸ்லி

---

''நெஞ்சில் விடுதலை நெருப்பையும், உணர்வில் சுதந்திர தாகத்தையும் சுமந்து, எம் மக்களுக்காக மடிந்த இம்மண்ணின் மைந்தர்களைத் தமிழீழம் கௌரவிக்கின்ற நாள் இது.''

— விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர்
கோ. மகேந்திரராஜா

---

# தம்பி காக்கும்!

இந்தமண்நம் சொந்தமண் எனும் முரசொலி
ஈழமெங்கும் எதிரொலிக்க வீரம் வந்தது!
சிந்துகின்ற குருதியால் களம்சி வந்தது!
சேருகின்ற வேங்கைகள் அணிந டந்தது!
தண்டிறங்கும் சிங்களப் படைதொ லைந்தது!
'தமிழர் மானம் தம்பி காக்கும்' - துணிவு
வந்தது!
இந்துமா கடலிலோர் புதிய நாடெழும் -
ஈழமென்ற பேரையிந்த வையகம் சொலும்!

- வல்வை ந. அனந்தராஜ்

---

# U. K இல் நானும் களத்தில் அவனும்

-- சி. குமரவேள்

அவன் இறந்து போனான்!
தொலைபேசிச் செய்திகள்
அப்படித்தான் கூறின.
ஆம்......
அவன் மண் மீட்பிற்காய்
மடிந்து போனான்
□
என் போல்
வெளிநாடு வருவதானால்
அவன் வந்திருக்கலாம்.
உத்திறோகம் பார்த்துக் கொண்டு
நாட்களைக் கடத்தியிருக்கலாம்.
ஏனோ... இதெல்லாம்
அவனால் முடியவில்லை!
இவை எதுவுமே
அவனை ஈர்க்கவில்லை!
ஏனோ . அவன்
மாறியிருந்தான்!
□ □
ஆம்...... அவன்
வித்தியாசமானவன் தான்.
நாங்கள் எல்லாம்
சந்தியில் நின்று
''சைட்'' அடித்த வேளைகளில்
அவன்
சுவரொட்டிகளை
வாசித்துக் கொண்டிருப்பான்.
நாங்கள ''அவளின்''
உடை பற்றிப் பேசிய பொழுது,
அவன் தமிழின்
நிலைபற்றிய பேசினான்!
வகுப்பில் நாங்கள்
வைர முத்துக்களைப்
பாடிய போது
அவன்
காசியையும்
புதுவையையும்
முணு முணுத்தான்!
ஏனோ .... அவன்
எங்களிலிருந்து
மாறியிருந்தான்!
□ □ □
நாங்களெல்லாம்
திருட்டுத் 'தம்' அடிக்கத்
தொடங்கிய காலத்தில் தான்
அவன்
திருட்டுத் தனமாய்
பிரசுரங்களை
விநியோகித்துக் கொண்டிருந்தான்!
நாங்கள்
ஆளுக்கொரு
'அவளைத் தேடத் தொடங்கிய போது
அவன்
'அவர்களு'டன் அதிகமாய்க்
கூடித்திரிந்தான்
நாங்கள்
காதலிக்கத் தொடங்குகையில்
அவன்
தனக்கே
குப்பித் தாலியைக்
கட்டிக் கொண்டான்!
□ □ □ □
ஏனோ..... அவன்
எங்களிலிருந்து
மாறியிருந்தான்
நான்
எனது
எதிர்காலத்தைத்
தேடத் தொடங்கினேன்.
அவன்
''எங்களின்''
எதிர்காலத்துக்காய்ப்
போராடிக் கொண்டிருந்தான்.
□ □ □ □ □
என்
பெயருக்குப் பின்னால்
U. K என்ற பட்டத்தை
நான் கொழுவிய சமயம்
அவன் பெயரின் முன்னால்
''மேஜர்'' என்ற பட்டம்
சேர்ந்து கொண்டது!
வெள்ளைகளுடன்
வாழ்வதற்காய்
நான்
என்மான உணர்வுகளைக்
கொன்ற போது,
அவன்
மொத்தமாக
ஒரு
முகாமுடனேயே
மோதியிருந்தான்!

(விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய மாவீரர் நாள் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை)

# யாழ் மருத்துவ பீடப் பரீட்சைகள் கொழும்பு, கண்டியில் நடைபெறும்

யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்களிற்கு இவ்வருட முடிவிலும், அடுத்த வருட ஆரம்பத்திலும் நடைபெறவிருக்கும் பரீட்சைகள் இம்முறை கொழும்பு அல்லது கண்டியில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி உள்ளதாக யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்கள் மற்றைய பல்கலைக் கழகங்களில் அனுமதி கேட்டு விண்ணப்பித்திருப்பதே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 400 மாணவர்கள் தற்பொழுதுகொழும்புப்பகுதியில் தங்கியிருப்பதாகவும். இவர்களிற்கான வினாத்தாள்கள் யாழ் பல்கலைக்கழகத்தால் அனுப்பப்படவிருப்பதாகவும். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இவர்களுக்கான பரீட்சைகளைப் பொறுப்பெடுத்து நடாத்தும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

# சாராயம் அருந்திய பின்னர் வலி வடக்கில் வீடுகளில் திருட்டு


வலி வடக்கில் மக்கள் இடம் பெயர்ந்துள்ள பகுதிகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

ஏழாலை கொல்லங்கலட்டி விழி சிட்டிப்பகுதிகளில் பல வீடுகளில் பல பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

களவு போன வீடுகள் சிலவற்றில் வெற்றுச் சாராய போத்தல்களும் காணப்பட்டதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கொல்லங்கலட்டியில் மக்கள் இடம் பெயர்ந்துளள வீடுகளில் இரவு வேளையில் டோர்ச் அடித்து தேங்காய் திருட முயன்றவர்கள் பிடிபட்டனர்.

அண்மையில் கொல்லங்கலட்டியிலுள்ள ஒரு வீட்டில் டோர்ச் லைட் அடித்து நல்ல குலையாகப் பார்த்து தேங்காய் திருட முயன்ற சிலர் வீட்டுக்காரர் வந்ததும் ஓடிவிட மரத்திலிருந்தவர் மட்டும் அகப்பட்டார். (48)




## சிங்கப்பூர் பிரதமர் 31 வருடத்தின் பின் ஓய்வு பெற்றார்

உலகிலேயே அதிக காலம் பிரதமராக இருந்த பெருமையைப் பெற்ற சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யூ நேற்று தனது 31 ஆண்டுகால பிரதமர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். புதிய பிரதமராக தற்போதைய துணைப்பிரதமர் தாங் நாளை பதவிஏற்கிறார். லீகுவான்யூ பிரதமர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற போதிலும் தாங்கின் அமைச்சரவையில் இவர் ஓர் சிரேஷ்ட அமைச்சராகப்பணிபுரிவார்.

## லேக் வலேன்ஸா முன்னணியில்

போலந்தில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்பார்த்தவாறே தொழிற்கட்சித்தலைவர் லேக் வலேன்ஸா முதற் சுற்று வாக்களிப்பில் முன்னணியில் உள்ளார். வலேன்ஸா 40 வீதமான வாக்குகளையும் போலந்தின் தற்போதைய பிரதமர் மசோஸிஸ்கி 22 வீதமான வாக்குகளையும் பெற்றுள்ளனர். ஜனாதிபதியாக தெரிவு செய்ய 50வீத வாக்குகள் தேவைப்படுவதால் இரண்டாம் சுற்று வாக்களிப்பு நடாத்தப்படவுள்ளது. இரண்டாம் உலகப்போரின் பின்னர் போலந்து ஜனாதிபதி ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்படுவது இதுவே முதல் தடவை.

## ஈராக் வெளியேற கால அவகாசம்

1991 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னதாக குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறாவிட்டால் அமெரிக்கா ராணுவத் தாக்குதலை ஆரம்பிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஐ. நாவின் ஒப்புதலை அமெரிக்கா கேட்டுள்ளது.

# கப்பலில் செல்லும் நோயாளர் நாளை சமுகம்தரக் கோரிக்கை

நாளை புதன்கிழமை கப்பல் மூலம் கொழும்பு செல்லவிருந்த கடும் நோயாளர்களைத் தவிர்க்க முடியாத காரணங்களால் கொண்டு செல்லமுடியாது இருப்பதாக யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கப்பல் எந்த நேரமும் புறப்படலாம் என்பதால் நோயாளர்கள் எதற்கும் தயார் நிலையில் இருக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

இந்த நோயாளர்கள் அல்லது அவர்களுடன் செல்பவர்கள் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறும், அவ்வாறு சமுகம் தராவிடில் இவர்களின் இடத்திற்கு வேறு நோயாளர்கள் அனுப்பப்படுவா ்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் செல்லவுள்ள நோயாளர்களின் விபரம் வருமாறு:- வே. யோகேஸ்வரன், அ. புவனேஸ்வரி, இராணி அம்மா, கே. தெய்வேந்திரம், பிரான்ஸிஸ், துரைராஜா. (70, 71, 74)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 27-11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

அரசியல் பொறுப்பாளர் ராஜன் பேச்சு

# மாவீரர் தின விழாக்கள் மக்கள் எழுச்சியை காட்டுகிறது

விடுதலைப்புலிகள் வீரத்துடன் போராடி தமிழ் ஈழத்தை மீட்டெடுத்தார்கள என்ற வரலாறு படைக்க வேண்டும் அன்றேல் இதற்காகப் போராடி அத்தனை வேங்கைகளும் அழிந்தார்கள் என்ற வரலாறு உருவாக வேண்டும்.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற வலி- கிழக்கு கோட்டம் கூட்டுறவாளர்களினால் நடாத்தப்பட்ட மாவீரர் தின விழாவில் பேசிய யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எமது போராட்டம் 1983-ல் உலகளாவிய ரீதியில் மறுமலர்ச்சி பெற்றது. இன்று கொட்டும் மழையையும், கொட்டும் குண்டுகளையும் பொருட்படுத்தாமல் மக்களும் கூட்டுறவாளர்களும் இம்மாவீரர் தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதில் இருந்து இப்போராட்டம் மக்கள் போராட்டமாக மாறியுள்ளதை உலகம் அறிந்திடும் என்றார்.

திரு. எஸ். ஜெயசந்திர போஸ் தலைமையில் இடம் பெற்ற இவ் விழாவில் கலாசாரப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில் சென்ற ஆண்டு மாவீரர் தினத்தின் போது 1307 வேங்கைகளும் இந்த ஆண்டு இதே தினத்தில் 2600 ககு மேலானோரும் தியாகிகளாகினர்.

இவர்களின் செங்குருதியில் தோய்ந்த கொடியே எமது தேசியக் கொடி. இந்திய இராணுவம் இங்கு வந்த போது அவர்களை எதிர்த்து நின்றோம். எமது போராட்டம் மழுங்கிவிடக் கூடாது அடுத்த சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே வனவாசம் செல்ல வேண்டியிருந்தது.

இப்படியான ஓர் உன்னத போராட்டத்தில் மக்களின் நம்பிக்கையின் சின்னமான கூட்டுறவு இயக்கம் உறுதுணையாக நின்று போராளிகளுக்கு உத்வேகத்தை அளிப்பதுடன் மக்களுக்கும் பணியாற்றி நிறபது பாராட்டுக்குரிய தென்றார்.

இவ் விழாவில் பல கலை நிகழ்ச்சி ளும், பேச்சுக்களும் இடம் பெற்றன. (66)

## புகைப்படக் கண்காட்சி நீடிக்கப்படும்

யாழ் பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் மறுமலர்ச்சிக்கழகத்தினால்நடாத்தப்பட்டு வரும் "தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாறு" புகைப்படக் கண்காட்சியை பார்வையிடுவதற்கு தினமும் பெருந்திரளான மக்கள் கூடுவதனாலும் அதில் சிலர் சண்காடசியை பார்வையிட முடியாது திரும்பச் செல்ல வேண்டிய நிலை ஏற்டடுவதாலும் இச்சண்காடசி அடுத்தமாதம் 7ம் திகதி சனிசகிழமை வரை பத்து நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என மறுமலர்ச்சிக் சழக வட்டாரங்கள் தெரிவித்தன.

**7 நாட்களில்**

வாறு சைக்கிள்கள் களவு போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இ ்தவேளை யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக சைக்கிள்கள் நிறுத்தப்படுவதனால் வாகனப் போக்குவரத்திற்கும் பெரும் இடைஞ்சலாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70, 47)

**பல்கலைக்கழக...**

புள்ளிகள்), சபாரெத்தினம் திலீபன் - யாழ்ப்பாணம் (பௌதிக வியல் - 245 புள்ளிகள்), ஐ கே. ஏ. சரோஜினி குமாரி – புத்தளம் (விவசாயம் - 240 புள்ளிகள்) ஆகியோரே தெரிவு செய்யப்பட்ட தமிழர்களாவர். (16)

**கொமரன்கடுவ...**

இவர்களிடமிருந்து ரி56-2 ரகத் துப்பாக்கி- 2, ரி56-1 ரகத் துப்பாக்கி- 1, 303ரகத் துப்பாக்கி- 2, ஐ. எம். ரவைகள்- 300,303 ரவைகள்- 60, ஏ. கே. கோல்ஸ்ரர்- 2 ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் றோயல் (சண்முகராசா- விக்கினேஸ்வரன் திரியாய்) வீரமரணமடைந்தார்.

இதன் பின்னர் இச்சம்பவம் நடந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் நடந்த மோதலில் இராணுவ இழப்பு விபரம் தெரியவில்லை.

இம்மோதலில் அலெக்ஸ் (சிவநாயகம் ரஜனிகாந்த் 55/9 கந்தசாமி கோவிலடி, திருமலை), அத்தார்(இராசையா நவரத்தினம், திரியாய்), பிலீஸ்(கும்முறபிட்டி) நிமால்(முருகையா காந்தரூ ன், திருமலை), றிச்சாட் (பேரின்பராசா விஜயராசா), நிலாவெளி) ஆகியோர் வீரமரணமடைந்தார்கள். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

**அதிகாலை...**

றப்பட்டன.

தமிழ்ஈழத்தை சித்தரிக்கும் மாபெரும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வளைவொன்று மானிபபாயில் அமைக்கப்பட்டிருந்தது.

வடமராட்சி கிழக்கு, தீவுப் பகுதி, வன்னிப்பகுதி போன்ற இடங்களிலும் இது தொடர்பான நிகழச்சிகள சிறப்பாக நடைபெற்றன. (71, ப10, 19, ப6, ப11, 48, ப1 66, 39, ப31, ப33, 33, 12, 21, 18, 50, 38, ப24, 34)

**நடக்காத...**

பெறும் என அறிவித்து அதற்கான அனுமதிப்பத்திரத்தையும் அனுபபிவைத்திருந்தது.

ஆனால் இப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பரீட்சை இங்கு நடைபெறவில்லை எனினும் பரீட்சைத்திணைக்களம அம் மாணவிக்கு தற்போது பெறுபேற்றைஅனுப்பி வைத்துள்ளது.

அந்த பெறுபேற்றில் இந்த மாணவி ஒரு பாடத்தில் 36 புள்ளிகளும், மற்றைபாடத்தில் 12 புள்ளிகளும், மூன்றாவது பாடத்தில்10 புள்ளிகளும் பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (74)

**அவசர...**

கவலை தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அச்சங்க அம்புலன்ஸ் மூலம் இந்த நோயாளிகள் யாழ்வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர்.

யாழ் வைத்திய சாலையில் ஓடகூடிய நிலையில் மூன்று அம்புலன்ஸ் இருந்தும் பெரும்பாலும் நோயாளிகளின் தேவைக்கு இவை பயன்படுத்தப்படுவதிலும் பார்க்க சொந்தத் தேவைக்கே பயன்படுவதாகக் கூறப்படுகிறது.

இங்கு ஆஸ்பத்திரி ஊழியரின் பாவனைக்கு என பிரத்தியேகமாக புதிய மினிபஸ் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளமையும் குறிபிடத்தக்கது. (74)

## வீரமரணம்

நேற்று முன்தினம் மாவிட்டபுரம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் லெப். வீனஸ் (எதிர்வீரசிங்கம் ரவிந்திரன், வல்வெட்டித் துறை) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

**வட-கிழக்கு...**

என்னும் தலைப்பில் சபாநாயகர் எம். எச். மொகமட் தலைமையில் இந்த மகாநாடு நடைபெற்றது.

**மக்கள்...**

வங்கிக்கு வந்த 25 மில்லியன் பணத்துடன், மக்கள் வங்கிக்கும் 25 மில்லியன் பணம்வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

மக்கள் வங்கியால் பொறுப்பேற்கப்படாத அந்த 25 மில்லியன் பணமும் மீண்டும் இலங்கை வங்கிக்கே வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

**வடமராட்சி...**

தியாலயத்தில் கலைகலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இங்கு தமிழ் ஈழ வளங்களைப் பிரதிபலிக்கும் பொருட்காட்சி ஒன்றும் நடை பெற்று வருகிறது.

இதேவேளை அஞ்சலோட்ட முறையிலும் சைக்கிள்களிலும் கூட்டுறவுக் கொடி பவனி வரும் நிகழ்ச்சி தெல்லிப்பழைச் சந்தியில் ஆரம்பமாகி சுன்னாகம் சென்று அங்கிருந்து புத்தூர் வழியாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியை சென்றடைந்தது. (50.ப10)

## தானைத் தலைவன் வாழ்க..,

பாரினில் தமிழினத்துக் கொரு நாடில்லை
ஈழத் தமிழினத்தின் அடிமை விலங்கு அறுத்தெறிந்து
தமிழினத்தின் புகழ் பாரெல்லாம் பரவச் செய்து
ஈழத்தமிழருக்கு தாயக மண்ணினை ஈன்றளிக்கும்
எங்கள் தமிழ் இனத்தின்
தானைத் தலைவன் பிரபாகரன்
வாழ்க வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகிறோம்.

வடபிராந்திய
சிற்றூர்தி சேவைச்சங்கம்

11146